மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.வ.நாராயணன், எம்.ஏ.,

ந.க.எண். 3558/ 2025 / எப்1 **நாள். 16.04.2026.**
ம.ஆ. எண்.01/2026-27

பொருள் : **மனைப்பிரிவு அனுமதி** – செங்கல்பட்டு மாவட்டம் – மறைமலைநகர் நகராட்சி – கீழக்கரணை கிராமம் நில அளவை எண்கள். 166/23-ல் 13937 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் தொழிற்சாலை மனைப்பிரிவு ஏற்படுத்திட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1.M/s. Subhamangal Realtors Pvt., Ltd., Signning Authority Rajesh Bohara என்பவரது மனு நாள். 13.10.2025.
2. தானப்பத்திர எண். 15442/2025 நாள். 07.10.2025.
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.E0CPFXCX/202/TCP நாள். 25.10.2025.
4. நகரமன்ற தீர்மான எண். 95, நாள். 10.03.2026.
5.மனைப்பிரிவு அனுமதிக் கட்டணம் செலுத்திய நாள். 16.03.2026.

உத்தரவு

பார்வை 1ல் காணும் மனுதாரர், இந்நகராட்சிக்குட்பட்ட கீழக்கரணை கிராமம் நில அளவை எண்கள். 166/23-ல் 13937 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் தொழிற்சாலை மனைப்பிரிவு ஏற்படுத்த நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் பார்வை 2-ல் காணும் தானப்பத்திரத்தின் மூலமாக அம்மனைப்பிரிவில் உள்ள பொது திறவிடங்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி **இம்மனைப் பிரிவு வரைபடத்திற்கு மவ/நஊஉ.இ(செமா). எண். 264/2025 என எண்ணிடப்பட்டு** தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 4-ல் கண்டுள்ளவாறு மனைப்பிரிவில் உள்ள பொது திறவிடங்களை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

அதையடுத்து பார்வை 5-ன்படி மனைப்பிரிவு அனுமதிக்கான கட்டணங்கள் இவ்வலுவலக செலுத்துச்சீட்டு எண். 020/01/3/25-26/0016859 நாள்.16.03.2026-ன்படி ரூபாய்.1,90,200/- மனைப்பிரிவு அனுமதி கட்டணமாகவும், பராமரிப்பு வைப்பு தொகை ரூபாய் 4,00,000/- செலுத்துச்சீட்டு எண். 020/01/3/25-26/0011260 நாள்.31.10.2025-ல் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வுத்தரவு கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட கீழக்கரணை கிராமம் நில அளவை எண்கள். 155/23-ல் 13937 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் தொழிற்சாலை மனைப்பிரிவு ஏற்படுத்தி அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

கூடுதல் நிபந்தனை : மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் பழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

ஆணையாளர்
மறைமலைநகர் நகராட்சி

இணைப்பு : 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் நிபந்தனை
2. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்.

16/4/26

பெறுநர்:

M/s. Subhamangal Realtors Pvt., Ltd.,
Signning Authority Rajesh Bohara,
No.36, Balfour Road, Kilæuk,
Chennai – 600 010.

நகல்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு அவர்களுக்குதகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. சார் பதிவாளர், பத்திரபதிவு அலுவலகம் செங்கல்பட்டு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. வருவாய் அலுவலர், மறைமலைநகர் நகராட்சி, மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலிமனை வரி விதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள.